## நம்மாழ்வார் அருளிச் செய்த
## திருவாய்மொழி
## ஒன்பதாம் பத்து

### நான்காம் திருவாய்மொழி - மையார்
### ஆழ்வார் திருமாலைச் சங்கு சக்கரங்களுடன் காண வேண்டிக் காதலுடன் கூப்பிட்டு அங்ஙனமே பெற்றமையை உகந்து அருளிச் செய்தல்

** மையார் கருங் கண்ணி * கமல மலர் மேல்
செய்யாள் * திரு மார்வினில் சேர் * திருமாலே! **
வெய்யார் சுடர் ஆழி * சுரி சங்கம் ஏந்தும்
கையா! * உன்னைக் காணக் * கருதும் என் கண்ணே 1

கண்ணே! உன்னைக் * காணக் கருதி * என் நெஞ்சம்
எண்ணே கொண்ட சிந்தையதாய் * நின்று இயம்பும் **
விண்ணோர் முனிவர்க்கு என்றும் * காண்பு அரியாயை *
நண்ணாது ஒழியேன் என்று * நான் அழைப்பனே 2

அழைக்கின்ற அடி நாயேன் * நாய் கூழை வாலால் *
குழைக்கின்றது போல * என் உள்ளம் குழையும் **
மழைக்கு அன்று குன்றம் எடுத்து * ஆநிரை காத்தாய்! *
பிழைக்கின்றது அருள் என்று * பேது உறுவனே 3

உறுவது இது என்று * உனக்கு ஆட்பட்டு * நின் கண்
பெறுவது எது கொல் என்று * பேதையேன் நெஞ்சம் **
மறுகல் செய்யும் * வானவர் தானவர்க்கு என்றும் *
அறிவது அரிய * அரி ஆய அம்மானே! 4

அரி ஆய அம்மானை * அமரர் பிரானை *
பெரியானைப் * பிரமனை முன் படைத்தானை **
வரி வாள் அரவின் அணைப் * பள்ளி கொள்கின்ற *
கரியான் கழல் காணக் * கருதும் கருத்தே 5

கருத்தே! உன்னைக் * காணக் கருதி * என் நெஞ்சத்து
இருத்தாக இருத்தினேன் * தேவர்கட்கு எல்லாம்
விருத்தா! ** விளங்கும் சுடர்ச் சோதி * உயரத்
தொருத்தா! * உன்னை உள்ளும் * என் உள்ளம் உகந்தே 6

உகந்தே உன்னை * உள்ளும் என் உள்ளத்து * அகம் பால்
அகந்தான் அமர்ந்தே * இடம் கொண்ட அமலா! **
மிகும் தானவன் மார்வு அகலம் * இரு கூறா
நகந்தாய் * நரசிங்கம் அதாய உருவே! 7

உரு ஆகிய * ஆறு சமயங்கட்கு எல்லாம் *
பொரு ஆகி நின்றான் * அவன் எல்லாப் பொருட்கும் **
அரு ஆகிய ஆதியைத் * தேவர்கட்கு எல்லாம் *
கரு ஆகிய கண்ணனைக் * கண்டு கொண்டேனே 8

கண்டு கொண்டு * என் கண் இணை ஆரக் களித்து *
பண்டை வினை ஆயின * பற்றோடு அறுத்து **
தொண்டர்க்கு அமுது உண்ணச் * சொல் மாலைகள் சொன்னேன் *
அண்டத்து அமரர் பெருமான் * அடியேனே 9

அடியான் இவன் என்று * எனக்கு ஆரருள் செய்யும்
நெடியானை * நிறை புகழ் அஞ்சிறைப் * புள்ளின்
கொடியானை ** குன்றாமல் * உலகம் அளந்த
அடியானை * அடைந்து அடியேன் உய்ந்த ஆறே 10

** ஆறா மத யானை * அடர்த்தவன் தன்னை *
சேறார் வயல் * தென்குருகூர்ச் சடகோபன் **
நூறே சொன்ன * ஓர் ஆயிரத்துள் இப்பத்தும் *
ஏறே தரும் * வானவர் தம் இன்னுயிர்க்கே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---